24th August 1970]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தத் தொகைகூட வரவில்லை என்ற காரணத்திற்காகத்தான் கூடிப் பேசி முடிவெடுக்கலாம் என்று சொன்னேன்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஒப்புக்கொண்ட பாகம் ஏதோ ரூ. 53,000 என்பது சரியல்ல. இந்தத் தொகை முடிவதற்கும் விவரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. அந்த விவரங்கள் இன்னும் கிடைக்கவில்லை என்றுதான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் கூடிப் பேசுவதாகச் சொன்னேன். திரு. நாயுடு அவர்கள் இப்போது விவரம் கேட்கிறார்கள். வேண்டுமானால் விவரத்தை அனுப்பி வைக்கிறோம்.

Cultivation of Banana.

* 4. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) whether there is any scheme for the cultivation of banana in the sandy area around Tuticorin harbour; and

(*b*) if so, the details thereof?

வாழைச் சாகுபடி

* **திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன —

(அ) தூத்துக்குடி துறைமுகப் பகுதியைச் சுற்றி மணலாகக் கிடக்கும் நிலப்பரப்பில் வாழை சாகுபடி செய்யும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தின் கீழ் தூத்துக்குடி துறைமுகத்தின் 25 மைல் சுற்றளவுக்கு அமைந்த தேரி நிலங்கள் வாழை, நெல், நிலக்கடலை, காய்கறி முதலியவை பயிரிடுவதற்காகப் பண்படுத்தப்படும். இதற்காக 500 புதிய கிணறுகள் வெட்டவும் துளைக்கிணறுகள் அமைக்கவும் விசையேற்றங்கள் நிறுவி அவற்றிற்கு மின் இணைப்புக் கொடுக்கவும் பண்படுத்தப்பட்ட நிலங்களில் வண்டல்மண் அடிக்கவும் நிலங்களைச் சமன்படுத்தல், டிராக்டர்கள் பயன்படுத்தப்படுமிடத்து அவற்றை வாங்குதல் பரிந்துரைக்கப்பட்ட பயிர்களைப் பயிரிடுதல் போன்றவற்றிக்குக் கடன் வழங்க இத்திட்டம் வகை செய்கிறது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமானவையா ? விவசாயிகளுக்குச் சொந்தமானவையா ? இவ்வாறு அந்த நிலங்களை வளப்படுத்துவதற்கு ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவு செலவாகுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது ?

[24th August 1970

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, இந்த நிலங்களில் சில அரசாங்கப் புறம்போக்காக இருக்கின்றன. சில பட்டாதாரர்களுக்குச் சொந்தமானவையாக உள்ளன. அவைகளையெல்லாம் சமப்படுத்தி சீர்செய்ய ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 என்ற அளவில் மொத்தம் ரூ. 3 லட்சம் செலவிடப் பட்டிருக்கிறது. வண்டல்மண் அடிப்பது போன்றவற்றிற்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 3,000 அளவில் மொத்தம் 6 ஆயிரம், ஏக்கருக்கு ரூ. 1 கோடி 80 லட்சம் ரூபாய் செலவிடப்படவேண்டியிருக்கிறது. சிமிண்ட் லைனிங் கொடுக்க 6,000 ஏக்கருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 400 அளவில் மொத்தம் ரூ. 24 லட்சம் செலவிடவேண்டியிருக்கிறது. டிரில்லிங்குக்காக ரூ. 4,50,000 செலவழிக்க வேண்டியிருக்கிறது. எல்லா இனங்களையும் சேர்த்து, கிட்டதிட்ட ரூ. 4 கோடியே 43 லட்சம் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவர் அவர்களே, தூத்துக்குடிக்குப் பக்கத்தில் இதைப்போன்று வாழைப் பயிரிடுவதற்கு திட்டமிட்டு கூட்டுறவு முறையில் குடியானவர்களுக்கு ஏராளமான பணத்தைக் கொடுத்து ஊக்குவித்து வருகிறார்கள். அது அந்த இடத்தில் மிகவும் நல்லமுறையில் லாபகரமாகப் பயிராகிறதா வளர்கிறதா என்பதை சர்க்கார் ஆராய்ந்திருக்கிறார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இந்தத் திட்டம் ஏற்கனவே 1969-ல் எடுத்துக்கொள்ளப்பட்டது என்றாலும் 1970 வரையில் மண்ணை சமப்படுத்துவதிலும் உரம் இடுவதிலும் விவசாயிகளுக்கு கடன் தருவதிலும் ரூ. 20.13 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமான சீர்திருத்தம் செய்யவேண்டியிருக்கிறது. இன்னும் வாழை முழுமையாகப் பயிரிடவில்லை.

திரு. டி. சந்தோஷம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலைப் பார்த்தால், கடற்கரை மண்ணிலே இப்படிப்பட்ட சீர்திருத்தத்தைச் செய்து இந்தச் சாகுபடி நடப்பதாகத் தெரிகிறது. அப்படியானால் பொருளாதாரத் துறையில் மிகவும் பிற்பட்ட ராமநாதபுரம் மாவட்டத்திலும் நீண்ட கடற்கரைப் பகுதி இருக்கிறது. அதிலும் இப்படிப்பட்ட திட்டத்தை விஸ்தரிக்கத் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடி அருகாமையில் இருக்கிற இடத்தில் 4,800 ஏக்கரில் செய்யப்படுகிறது. குமாரகிரி, சேர்வைக்காரன்மடம், கட்டாளம்குளம், முடித்தான்ஏந்தல், வர்த்தகரெட்டிப்பட்டி (புதுக்கோட்டை), ஸ்ரீவைகுண்டம் பகுதியில் 1,600 ஏக்கர், ஒட்டப்பிடாரம் பகுதியில் சில இடங்களில் மட்டும்தான் எடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளைத்தான் 6,000 ஏக்கர் என்று சொன்னேன். ராமநாதபுரத்தில் இல்லை.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு ரூ. 4 கோடிக்கு அதிகமாகச் செலவிட வேண்டியிருப்பதால், கடற்கரைப் பகுதியில் பரிட்சார்த்தமாக ஆரம்பிக்கும் திட்டமாக இருப்பதால், 10, 20 ஏக்கரை எடுத்துக்கொண்டு அதில் செய்து ஏதாவது பலன் அளிக்கிறதா என்று தெரிந்து கொண்டு, இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க முயற்சி எடுக்கப்படுமா? அரசின் உத்தேசம் என்ன?

24th August 1970]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : குறிப்பாக அக்ரோ ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் என்ற ஒரு நிறுவனம் 20, 28 வங்கிகள் ஒன்ருகச் சேர்ந்து உண்டாக்கப்பட்டிருக்கிறது. அந்த நிறுவனம் இவர்களுக்கு உதவி செய்ய முன் வந்திருக்கிறது. மத்திய அரசு பரிசீலனை செய்து எந்த அடிப்படையில் இதைச் செய்ய வேண்டுமென்று வரையறுத்திருக்கிறதோ அந்த வகையில் திட்டமிட்டு மாநில அரசு செய்து வருகிறது.

திரு. கே. ராஜாராம் : மணல் பிரதேசத்தில் சிமிண்ட் லைனிங் போட்டு அதற்கு மேல் மணல் பரப்பி விவசாயம் செய்யும் திட்டம், திருநெல்வேலியில் திருச்செந்தூர் பகுதியில் தனிப்பட்ட நிலச்சுவான்தார்கள் செய்து, வெற்றிகரமாக இருப்பதாக நிரூபித்திருக்கிருர்கள். அதைப் பார்த்துத்தான் இந்தத் திட்டத்தை அரசாங்கம் நடத்த முற்பட்டது. அது வெற்றிகரமாக நடப்பதாகச் சொல்லப்படுகிறது. தூத்துக்குடிப் பகுதியிலும் சிறுசிறு பகுதிகளாக எடுத்து, வெற்றிகரமாகச் செய்யமுடியுமா என்று பார்த்து, அதற்குப் பின்தான் முழுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அரசாங்கம் கருதுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : திட்டமிட்டிருப்பது 6,000 ஏக்கர். இன்னும் கையகப்படுத்தவேண்டிய நிலம் ஏராளமாக இருக்கிறது. அதைக் கையகப்படுத்தி வண்டல் மண் கொட்ட வேண்டும். சிமிண்ட் லைனிங் போட வேண்டும். ஆரம்ப வேலைகளைச் செய்வதற்கான வசதி வாய்ப்புகளும் வாகன வண்டி வசதியும் இப்போது அங்கே இல்லை. போதுமான டிரில்லிங் மிஷின் கிடைக்கவில்லை. ஆரம்பக் கட்டத்தில்தான் இந்த வேலை இருக்கிறது என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : என்னுடைய கேள்வி, ஒரே மொத்தமாக விசாலமான பிரதேசத்தை எடுத்துக்கொண்டு விவசாயம் செய்து பார்ப்பதில் பெரும் தொகை நஷ்டம் ஏற்படாமல் இருப்பதற்காக, சிறிய இடத்தை எடுத்து அங்கு பரிட்சார்த்தமாக நடத்தி வெற்றிகரமாக நடக்கும் என்று தெரிந்த பிறகு, பெரும் அளவில் அதைச் செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கையகப்படுத்தப்பட்ட இடங்களில் விவசாயம் செய்ய அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

Pilot scheme for small formers

* 5. *Q*.—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleasd to **state :**

(*a*) whether there is any proposal under the consideration of the Government to implement a pilot scheme for the progress of small farmers in South Arcot district; and

(*b*) if so, the aims of the scheme?

சிறிய விவசாயிகளின் முன்னேற்றத்திற்கான முன்னோடி திட்டம்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தென்னார்க்காடு மாவட்டத்தில் சிறிய விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக முன்னோடி திட்டமொன்றை செயல்படுத்தும் செயற்குறிப்பு தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், இத்திட்டத்தின் நோக்கங்கள் என்ன ?